इंडिया तूतरकम்

இந்திய தூதரகம்
கோலாலம்பூர், மலேசியா

# செய்தி அறிக்கை

## மலேசிய மாணவர்களுக்கான 'ஆயுஸ்' கல்வி உபகார சம்பளம் 2017-18

கோலாலம்பூரிலுள்ள இந்திய தூதரகம், இந்தியாவில் பாரம்பரிய மருத்துவத் துறையில் கல்வியை மேற்கொள்ள விரும்பும் ஆர்வமுடைய மலேசிய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றது. கீழ்காணும் துறைகளில் மாணவர்கள் தங்களது மேற்கல்வியைத் தொடரலாம்.

I) ஆயுர்வேதம் மருத்துவம் & அறுவை சிகிச்சை (BAMS) (5 ½ வருடங்கள்) – 11 இடங்கள்

II) சித்த மருத்துவம் & அறிவியல் துறையில் இளங்கலை பட்டம் (BSMS) (5 ½ வருடங்கள்) – 5 இடங்கள்

III) யுனானி மருத்துவம் & அறுவை சிகிச்சை துறையில் இளங்கலை பட்டம் (BUMS) (5 ½ வருடங்கள்) – 2 இடங்கள்

IV) ஹோமியோபதி மருத்துவம் & அறுவை சிகிச்சை துறையில் இளங்கலை பட்டம் (BHMS) (5 ½ வருடங்கள்) – 2 இடங்கள்

2. ICCR விண்ணப்பபாரத்தை கீழ்காணும் இந்திய தூதரக அகப்பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(http://indianhighcommission.com.my/pdf/AYUSH_Scholarship_Application_Form.pdf)

3. இளங்கலை பட்டத்தை விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் கீழ்காணும் ***ஏதேனும்*** ஒரு தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் :

i) எஸ்.டி.பி.எம்
ii) 'ஏ' நிலை
iii) அனைத்துல பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம் பெற்றவர் (IB)
iv) அமெரிக்க உயர்நிலை பள்ளியில் டிப்ளோமா பயின்றவர்
v) 2 ஆண்டுகள் தெற்கு ஆஸ்திரேலியா மெட்ரிகுலேஷனில் பயின்றவர் (SAM)
vi) 2 ஆண்டுகள் கனடா பல்கலைக்கழகத்தில் பயின்றவர் (CPU) அல்லது
vii) இந்தியாவில் 12-ஆம் வகுப்பு அல்லது அதற்குச் சம மதிப்புள்ள வேறு தகுதிகள்

4. விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழியில் புலமை பெற்றிருக்க வேண்டும். மேலும், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களைத் தகுதி பாடமாக எடுத்திருக்க வேண்டும். இந்த கல்வி உபகார சம்பளம் கல்வி கட்டணம், உதவித் தொகை, கொந்திஞ்ஞன் கிராண்ட் (Contingent Grant) உதவித்தொகை மற்றும் வாடகை வீட்டு உதவித் தொகைகளை வழங்குகிறது.

5. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பாரத்தை 6 பிரதிகளோடு கீழ்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**Education Wing [AYSUH scholarship],**
**High Commission of India,**
**Menara 1 Mon't Kiara, Level 28,**
**No. 1, Jalan Kiara, Mon't Kiara,**
**50480 Kuala Lumpur**.

6. விண்ணப்பபாரத்தை ஒப்படைக்கும் இறுதி நாள் **ஜூலை 10, 2017.** மேல் விவரங்களை அறிய 03-6205 2350 ext 203 என்ற தொலைபேசி எண்களோடும் அல்லது edu1.kl@mea.gov.in என்ற மின்னஞ்சலோடு தொடர்புக் கொள்ளலாம்.

*******